[1981 மார்ச் 2

திரு. ஏ. சி. சண்முகம் : தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் செண்பகத் தோப்பு, மேல் அரசம்பட்டு, அணைக் கட்டைக் கட்ட அரசு முன் வருமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணைக் கேள்வி மூலக் கேள்வியை ஒட்டி இல்லாததால் அனுமதி மறுக்கப்படுகிறது.

மதுரை மாவட்டத்தில் உயர் மட்டக் கால்வாய்

*வினா எண் 335 திருவாளர்கள், வே. இரா. ஜெயராமன், கே. எம். எஸ். சுப்பிரமணியன், ஆர். டி. கோபாலன், கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம் லோயர் கேம்பிலிருந்து பெரிய குளம் வரை, மேற்கு மலைத் தொடர் அடிவாரத்தில் ஒரு உயர் மட்டக் கால்வாய் கம்பம், தேனி, போடி நாயக்கனூர், பெரிய குளம் ஆகிய தொகுதிகளின் வழியாக அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) இத்திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) இத் திட்டம் தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களின் ஆய்வில் உள்ளது.

திரு. வே. இரா. ஜெயராமன் : தலைவர் அவர்களே, ஆங்கிலேயர் காலத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளான கம்பம், போடி, தேனி, பெரியகுளம் போன்ற பகுதிகள் பயன் அடையும் வகையில் 18ஆம் கால்வாய்த் திட்டம் என்ற பெயரில் ஆய்வு செய்யப்பட்டது. அந்த ஆய்வின் அடிப்படையில், இந்தத் திட்டம் மேற் கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே 18-ஆம் காலவாய்த் திட்டம் என்பது ஆங்கிலேயர் காலத்தில் ஆய்வு செய்யப்பட்டது. அதற்குப் பிறகு அந்தத் திட்டத்தின் மீது மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. அந்தப் பகுதி வறண்ட பகுதியாக இருக்கிற காரணத்தாலும், சட்ட மன்ற உறுப்பினர்களும், அங்கேயிருக்கும் விவசாயப் பெருங்குடி மக்களும் கேட்டுக் கொண்ட காரணத்தாலும், இப்போது திரும்ப வும் அந்தத் திட்டத்தை மறு ஆய்வு செய்துக் கொண்டு வரு கிறோம். ஆய்வு முடிந்த பிறகு அரசு தக்க நடவடிக்கை மேற் கொள்ளும்.

1981 மார்ச் 2]

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், புதுக் கோட்டை மாவட்டம் ஆகியவைதான் வறட்சிப் பிரதேசம் என்று கூறிக் கொண்டு வருகிறோம். என்னுடைய தொகுதியைச் சேர்ந்த கீழ்சத்திரச்சேரி, மற்றும் பல்லவராயப்பட்டி மிகவும் பயங்கரமான வறட்சிப் பகுதியாக இருக்கிறது. கீழே பெரியார் ஓடிக் கொண்டு இருக்கிறது. வைகை ஓடிக் கொண்டு இருக்கிறது. மேலே இருக்கும் பகுதிகள் வறட்சிப் பகுதியாக இருக்கிற காரணத் ணத்தால், அரசு தயவு செய்து முன்னுரிமை கொடுத்து, இந்தத் திட்டத்தை விரைவில் நிறைவேற்றத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கருத்தை அரசு ஏற்றுக் கொண்டு இருக்கிறது. பெரியாறும், வைகையும் அருகிலே கரை புரண்டு ஓடுவதை அவர்கள் பார்த்துக் கொண்டு இருக்கிறார்களே தவிர பலனை அனுபவிக்க முடிய வில்லை. மிக வறண்ட பகுதியாக இருக்கிறது என்று அறிந்து இப்போது ஆய்வு செய்யச் சொல்லியிருக்கிறோம். ஆய்வு வேலைகள் துரிதமாக முடிந்தவுடன், மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு பரிசீலிக்கும்.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, கம்பம் பள்ளத்தாக்கில் ஆய்வில் இருக்கிற நீர்ப்பாசனத் திட்டங் கள் அமலுக்குக் கொண்டு வருகிறபோது ஏற்கனவே வைகைத் திட்டத்தின் மூலம் பாசனம் பெறும் நிலங்கள் பாதிக்கப்படாமல் கவனித்துக் கொள்ள அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, வைகை பெரியாறு மேம்பாட்டுத் திட்டத்தின் மூல மாக கிடைக்கக்கூடிய நீரை முறையாகவும், கவனமாகவும் பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் கால்வாய் களை நவீனப்படுத்தும் வேலை செய்து வருகிறோம். எனவே நமக்கு உபரியாகக் கிடைக்கும் நீரை எப்படிப் பயன்படுத்துவது என்று வருமே தவிர ஏற்கனவே பயன் பெற்று வருகிற விவசாயி கள் எந்த வகையிலும் பாதிக்கப்படாமல் நிச்சயமாக அரசு கவனித்துக் கொள்ளும்.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ஆங்கிலேயர் காலத்தில் ஆய்வு செய்யப்பட்டது என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார் கள். இந்தத் திட்டம் உண்மையிலேயே நிறைவேற்றப்படு மானால், வறண்ட பகுதியாக உள்ள கம்பம், கூடலூர் பெரிய குளம் மட்டுமல்ல, இப்படி வழிவழியாக வந்தால் நிலக்கோட்டை

பகுதிக்குக்கூட பயன்படும். இப்படி வருவதால் கீழ் நோக்கித் தான் அந்தக் கால்வாய் வரும் என்பதால் அதிகச் செலவு ஆகாது. பெரியாறு அபிவிருத்திச் செலவிலேயே செய்துவிடலாம். அதிகப் படியான ஏக்கர் நிலத்திற்குப் பாசனம் கிடைக்கும். பெரியாறு தண்ணீரைப் பார்த்துக் கொண்டுதான் இதுவரையில் நிலக் கோட்டை மக்கள் இருக்கிறார்கள். ஆகவே, இந்தத் திட்டத்தை விரைவில் நிறைவேற்றி, நிலக்கோட்டைக்கும் விரிவுபடுத்த அமைச்சர் அவர்கள் வழிவகை செய்யும் வகையில் நடவடிக்கை களை மேற்கொள்வார்களா?

[முற்பகல் 10-30]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, 18-ம் கால்வாய் திட்டத்தில் இந்தப் பகுதி இடம் பெற வில்லை. ஆனால் வேறு வகையிலே பரிசீலனை செய்ய வேண்டுமென்று கோரிக்கை கொடுத்திருக்கிறார்கள். அதை அரசு பரிசீலனை செய்து வருகிறது. ஆகவே, இந்தத் திட்டத்தில் சேர்க்க வாய்ப்பு இருக்காது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். டி. கோபாலன் : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தினால் கூடலூர் பகுதி மக்களுக்குத் தண்ணீர் கிடைக்க வில்லை என்றால் ஒரு கொந்தளிப்பு ஏற்படும். ஆகவே, கூடலூர் பகுதி மக்களுக்கும் இந்தத் திட்டத்தினால் தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர் களே, திட்டத்தை ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். அதற்குள்ளாக பயமுறுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

SATYAMEVA JAYATE TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

சேலம் வனஸ்பதி தொழிற்சாலை.

*வினா எண் 226 திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டத்தில் 10 டன் உற்பத்தித் திறன் படைத்த ஒரு வனஸ்பதி தொழிற்சாலை வெளியார் ஒருவருக்கு விற்கப்பட்டு 25 டன் உற்பத்தித்திறன் படைத்த தாக ஈரோட்டுக்கு மாற்ற முயற்சி நடப்பது தெரியுமா?